கேள்வி. வரி விதிக்கலாமா கூடாதா என்பது வேறு. நிதி மசோதாக்கள் வரும்போது பேசவேண்டிய விவரங்கள் அவை. இப்பொழுது திருமதி அனந்த நாயகி அம்மையாரும், திரு. ஹாண்டே அவர்களும் சொன்னார்கள். துணை மானியக் கோரிக்கைகள் வரும்போது, வரவு செலவு விவரம் பற்றிச் சொல்லலாம் என்று. இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் செய்திருப்பது ஒரு அறிவிப்புதான்; அரசாங்கத்தின் நிலையை கொஞ்சம் முன்னோடியாக இந்த அவைக்கும், நாட்டிற்கும் ஆயத்தம் செய்யும் வகையில் தெரிவிக்கப் பட்ட அறிவிப்புதான். இப்படி எல்லா விவரங்கள் பற்றி 82-வது விதியின் கீழ் அறிக்கை கொடுக்கலாம். A statement can be made by a Minister no a matter of public importance என்று அந்த விதியில் இருக்கிறது. சாதாரணமாக பப்ளிக் இம்பார்டன்சுக்கே ஸ்டேட்மென்ட் செய்யலாம் என்றால், மிக மிக முக்கியமான ஒரு விசேஷ பப்ளிக் இம்பார்ட்டென்ஸ் இருக்கும்போது, இந்த விதியின் கீழ் ஸ்டேட்மென்ட் செய்யக் கூடாது என்கிற விதிவிலக்குக் கிடையாது.

திரு. ஹாண்டே அவர்கள் சொன்ன 205-வது பிரிவின்படிச் சொன்னாலும், இது அறிவிப்புதான். பில்கள் வரும்போது, ஏராளமாக வாய்ப்புக்கள் நமக்கு இருக்கும். இப்பொழுது அவைமுன் இருப்பது, 82-வது விதியின் கீழ் முதல் அமைச்சர் அறிவிப்புக் கொடுக்க உரிமை இருக்கிறதா என்றால், தாராள மாக அந்த உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட விசேஷ காலத்தை முன்னிட்டு, நெருக்கடியை முன்னிட்டு, முன்கூட்டியே ஆயத்தம் செய்ய வேண்டும் என்று, சபையின் நம்பிக்கையைப் பெற, அவர்கள் இந்த அறிக்கையை அளித்திருக் கிறார்கள். இதன் விவரங்கள்பற்றி மசோதாக்கள் மன்றத்தின் முன்னாலே வரும். ஆகவே, இதில் எந்த விதமான ஒழுங்கீனமும் இல்லை என்று தீர்ப்பளிக் கிறேன்.

(4) கவன ஈர்ப்பு

(அ) திருப்பூரிலுள்ள சலவைத் தொழிற்சாலைத்தொழிலாளரின் வேலை நிறுத்தம்.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike of the workers in many bleaching factories at Tiruppur in Coimbatore district in October 1971.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டப் பொதுத் தொழிலாளர் சங்கம், திருப்பூரில் உள்ள பாரதி சலவைத் தொழிற்சாலை ஏனைய 57 சலவை செய்தல்/சாயமேற்றல் தொழிற்சாலைகளில் நிர்வாகத்தினரிடமிருந்து, 1970-71-ஆம் ஆண்டுக்குரிய தொழிலாளர் ஊதியங் களில் 20 சதவீதம் பூரிப்பூதியம் கோரி, கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரி முன்பு தகராறு ஒன்றை எழுப்பி உள்ளது. தொழிலாளர் நல அதிகாரி இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டுள்ளார். சங்கம் ரூ. 150 கோரியது. நிர்வாகம் ரூ. 75 அளிக்க முன்வந்தது. தொழிலாளர் நல அதிகாரி ரூ. 95 கொடுக்கலாம் என்று கருத்துரை அளித்திருக்கிறார்.

(ஆ) மதுரை மகாலட்சுமி ஆலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தம்

1971 டிசம்பர் 10]

THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike of the 1,000 workers of Mahalakshmi Mills, Madurai demanding payment of minimum bonus, for the years 1965 to 1969, from 20th October 1971.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மதுரை மகாலட்சுமி ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் உடன்பாட்டை ஒப்புக்கொண்டு வேலைக்கு திரும்பினர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். முற்பகல் 10-30

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரு வார காலம் வேலை நிறுத்தம் செய்ததில் தொழிலாளருக்கு கிடைக்கவேண்டிய போனஸ் பின்னால் கிடைக்கும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைக்கு சென்று இருக்கிறார்கள். அந்த நேரத்தில் தொழிலாள அமைச்சர் இங்கு இல்லாமல் இருந்ததால், வேறு அமைச்சர் தலையீட்டின் காரணமாக பிரச்சனை சீக்கிரம் முடிந்தது. இப்பேர்ப் பட்ட தகராறுகள் வருகிறபோது, மற்ற அமைச்சர்கள் தலையிட்டு உதவி செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அதுபோலவே நாங்கள் அந்த முறையை பின்பற்றி வருகிறோம். தொடர்ந்து அந்த முறை பின்பற்றி வரும்.

(5) அறிவிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் காக (அண்ணாமலை யூனிவர்சிடி செனெட்) மூவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர் களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது மூன்று என்பதால், திரு. எம். செல்வராஜ், திரு. பொன் சொக்கலிங்கம், திரு. க. சுப்பு ஆகிய மூன்று வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(6) 1971-72-ம் ஆண்டிற்கான மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மின் வாரிய அறிக்கையை பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சித் தரக்கூடிய அறிக்கையாக இருக்கிறது. மிகவும் சிறப்பான முறையில் அந்த நிர்வாசம் செயல்படவேண்டும். அந்த நிர்வாகத்திடம் ஒத்துழைப்புக் கொடுத்து நம் நாட்டிலே உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார சிறப்பு ஏற்பாடுகள் செய்து முடிக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களில் இருக்கும் எல்லா கிராமப் பகுதி களுக்கும் மின்சாரம் கொடுத்தாகிவிட்டது. மதுரை மாவட்டம், ஆற்காடு மாவட்டம் இவற்றிற்கு மின்சாரம் கொடுத்தாகி விட்டது. இன்னும் பல கிராமங்களில் மின்சாரம் கொடுக்க முழு முயற்சி அவர்கள் எடுத்துக்